DEPOSITION OF WITNESS
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )
**O.S.No. 6/2013**

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : ராஜாதேவர் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 25.03.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 25th March 2026

**முதல்விசாரணை :**

நான் இவ்வழக்கில் 2ம் வாதி ஆவேன். நான் இன்று இந்த வழக்கில் எனக்காகவும், 1ம் வாதிக்காகவும் சேர்த்து எனது சத்தியபிரமாண நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது முதல் தரப்பு விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

1. 22.02.1932 சாமித்தேவர் பிராது 2ம் அயிட்ட சொத்தின் ஒரு பகுதியையும், அதனை சேர்ந்த பகுதியையும், கிரையம் பெற்றதற்கான பதிவு கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** 14.09.1934 தேதியிட்ட சாமித்தேவர் பிராது 1ம் அயிட்ட சொத்தின் ஒரு பகுதியையும், அதனை சேர்ந்த பகுதியையும், கிரையம் பெற்றதற்கான பதிவு கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. 22.02.1940 தேதியிட்ட சாமித்தேவர் பிராது 1ம் அயிட்ட சொத்தின் ஒரு பகுதியையும், அதனை சேர்ந்த பகுதியையும், கிரையம் பெற்றதற்கான பதிவு கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 31.03.1942 தேதியிட்ட சாமித்தேவர் பிராது 1ம் அயிட்ட சொத்தின் ஒரு பகுதியையும், அதனை சேர்ந்த பகுதியையும், கிரையம் பெற்றதற்கான பதிவு கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. 23.01.1964 தேதியிட்ட சாமித்தேவர், வா.சா.1ன் தகப்பனார் சங்கரபாண்டித்தேவர் ஆகியோர் பிராது தபசில் சொத்துக்களுடன் சேர்ந்த மற்றொரு பகுதியை கந்தசாமி தேவர், சுப்பையாத்தேவர் ஆகியோர்களுக்கு கிரையம் செய்து கொடுத்ததற்கான பதிவு கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. 24.01.1964 தேதியிட்ட 1ம் வாதி பிராது தபசில் சொத்துக்களுடன் சேர்ந்த மற்றொரு பகுதியை சுடலைமுத்துதேவருக்கு கிரையம் செய்து கொடுத்தற்கான பதிவு கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**வாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல்விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**